முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

நாள். 06.08.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**அசல் வழக்கு எண். 12/2025**

2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 06ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சுந்தரம் | வயது | : | 56 |
| ஊர் | : | சோதியம்பாக்கம் | தொழில் | : | உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்புத்துறை |

**வா.சா. 1 : (திருநாவுக்கரசு) வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதன்மை விசாரணை:**

நான் இவ்வழக்கில் **வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். இதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். **கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 18.02.2008 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் இணையம் மூலம் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கணேசன் இறந்ததற்கான இணையம் மூலம் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 28.07.2008 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் இணையம் மூலம் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 08.12.2024 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா. சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 16.12.2024 தேதியிட்ட வாதி கொடுத்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. அன்னபூரனி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எனது சாட்சியத்தை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு